▲ வடபழனியில் உள்ள 200 ஆண்டுகள் பழமையான ஆதிமூலப் பெருமாள் கோயிலில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள், குடமுழுக்கு நடத்துவதற்கான பணிகள் உள்ளிட்டவை குறித்து இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அதிகாரிகளுடன் நேற்று ஆய்வு செய்தார். படம்: பு.க.பிரவீன்

கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கப்படும்

● அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு உறுதி

■ **சென்னை**

தமிழகத்தில் உள்ள கோயில் நிலங்கள், ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து பாரபட்சமின்றி மீட்கப்படும் என்று அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை வடபழனி ஆதிமூலப் பெருமாள் கோயிலில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று ஆய்வு மேற்கொண்டார். அறநிலையத் துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன் உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

ஆய்வுக்குப்பின் செய்தியாளர்களிடம் சேகர்பாபு கூறியதாவது:

200 ஆண்டுகள் பழமையான வடபழனி ஆதிமூலப் பெருமாள் கோயிலில் கடந்த 1960-க்குப் பின் திருப்பணி நடைபெறவில்லை. தற்போது முதல்வர் உத்தரவுப்படி இந்த கோயிலிலும் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட உள்ளது. கோயிலில் பணியாற்றும் அர்ச்சகர்கள் உட்பட 6 பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் கோயில்களுக்கு சொந்தமான 79 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. ரூ.500 கோடி மதிப்புக்கு மேலான சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. ஜமீன் பல்லாவரத்தில் அகத்தீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான 2.2 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டுள்ளது. இதே போன்று பல்வேறு கோயில்களுக்கு சொந்தமான நிலங்களை மீட்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

கோயில் நிலங்களுக்கான வாடகை, தற்போதுள்ள சூழலுக்கு ஏற்ப திருத்தி அமைக்கப்படும். கோயில் நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு பட்டா வழங்கப்படாது. அதே நேரம் நீண்டகாலம் குழுவாக ஒரே பகுதியில் கோயிலுக்கு சொந்தமான இடத்தில் குடியிருப்பவர்களை வாடகைதாரர்களாக மாற்ற பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆட்சியில் கோயில் சொத்துகளை யார் ஆக்கிரமித்தாலும் பாரபட்சமின்றி மீட்கப்படுவதுடன், தவறு செய்யும் அலுவலர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து வடபழனி ஆண்டவர் கோயிலின் உப கோயிலான புலியூர் பரத்வாஜேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான இடத்தில் உள்ள சூளைமேடு அஞ்சுகம் உதவிபெறும் தொடக்கப்பள்ளியை ஆய்வு செய்த அமைச்சர், பள்ளியின் சுற்றுப்புறத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், சத்துணவுக்கூடத்தை புதுப்பிக்கவும் உத்தரவிட்டார்.

கல்லூரிகள் திறப்பு தொடர்பாக

துணைவேந்தர்களுடன் அமைச்சர் இன்று ஆலோசனை

■ **சென்னை**

தமிழகத்தில் கரோனா பரவல் காரணமாக பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. இதையடுத்து, மாணவர்களுக்கு வகுப்புகள் மற்றும் தேர்வுகள் இணையவழியில் நடத்தப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே நாடு முழுவதும் நோய்த் தொற்று பரவல் குறைந்துவருவதால், பல்வேறு மாநிலங்களில் பள்ளி, கல்லூரிகளைத் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், உயர்கல்வித் துறையின்கீழ் செயல்படும் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுடன் அமைச்சர் பொன்முடி சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று (ஜூலை 1) ஆலோசனை நடத்த உள்ளார்.

இக்கூட்டத்தில், கல்லூரிகள் திறப்பு, பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகள், புதிய கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை, இணைய வகுப்புகளின் நிலை மற்றும் நிலுவைத் திட்டங்கள் உட்பட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட உள்ளது.

புதிய கல்விக் கொள்கையின் பல்வேறு சாராம்சங்களை படிப்படியாக அமல்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தவிர்க்கும் வழிமுறைகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாலிடெக்னிக் கல்லூரிகளில்

9-ம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை

● தமிழக அரசு அரசாணை வெளியீடு

■ **சென்னை**

கரோனா பாதிப்பால் 10-ம் வகுப்பு பொதுத் தேர்வு நடைபெறாததால், 9-ம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடத்திக்கொள்ள தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

பாலிடெக்னிக் படிப்புகளைப் பொறுத்தவரை 10-ம் வகுப்பு அல்லது 12-ம் வகுப்பு முடிந்த பின்னர்தான் சேர்க்கை நடைபெறும். 10-ம் வகுப்பில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை நடத்தப்படும்.

இந்நிலையில், கரோனா பாதிப்பு காரணமாக 10-ம் வகுப்பு பொதுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது. அதேபோல, கடந்த கல்வியாண்டு 9-ம் வகுப்பு மாணவர்களுக்கான முழு ஆண்டுத் தேர்வும் நடைபெறவில்லை.

இந்நிலையில் அரசு முதன்மைச் செயலர் தா.கார்த்திகேயன் வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது:

நடப்பு கல்வியாண்டுக்கான பாலிடெக்னிக் சேர்க்கைக்கு, 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களின் 9-ம் வகுப்பு மதிப்பெண்ணின் தர வரிசை அடிப்படையில், இடஒதுக்கீடு முறையைப் பின்பற்றி நடத்திக்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

இவ்வாறு அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

நிராகரிக்கப்பட்ட பட்டா மனுக்களை

ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டும்

● மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தல்

■ **சென்னை**

சென்னை மாவட்ட ஆட்சியர் ஜெ.விஜயாராணி தலைமையில் நிலுவையில் உள்ள சான்றிதழ்கள் பட்டா மாற்றம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. அப்போது அதிகாரிகளிடம் ஆட்சியர் விஜயாராணி கூறியதாவது:

அலுவலர்களை பொதுமக்கள் தொடர்பு கொண்டால் சரியாக பதிலளிக்க வேண்டும். நிலுவையில் உள்ள மனுக்களை அடுத்த ஆய்வுக் கூட்டத்துக்குள் குறைக்க வேண்டும். வருவாய் கோட்டாட்சியர்கள் 'வாட்ஸ் அப்' மூலம் தினசரி முன்னேற்ற அறிக்கைகளை அன்றே பதிவு செய்ய வேண்டும். வாரந்தோறும் திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் மனுதாரர்களுக்கு தகவல் அனுப்பி, அவர்களை விசாரித்து ஆவணங்களை பெற்று வெள்ளிக்கிழமை அன்று தகுதியானவர்களுக்கு பட்டாக்களை நிலவரித்திட்ட தனி வட்டாட்சியர்கள் வழங்க வேண்டும்.

மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் உதவி இயக்குநர் ஆகியோர் அதிக மனுக்கள் நிலுவையில் உள்ள வட்டங்களை பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டும். நிராகரிக்கப்பட்ட பட்டா மனுக்களை வருவாய் கோட்டாட்சியர்கள் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை மாநகராட்சியில்

746 தற்காலிக பதவிகள் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு

■ **சென்னை**

சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகளிலும் தற்காலிகமாக 1,896 பதவிகள் தோற்றுவிக்கப்பட்டன. மாநகராட்சியின் செலவீனத்தை குறைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 1,896 பதவிகளில் 1,150 பதவிகள் அவசியம் இல்லாதது என கருதி கடந்த 2012-ம் ஆண்டு 746 தற்காலிக பதவிகளாக குறைக்கப்பட்டது.

இப்பதவிகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு கடந்த மார்ச் 31-ம் தேதியுடன் முடிவடைந்தது. இந்நிலையில், மாநகராட்சி எல்லை விரிவுபடுத்தப்பட்டு, மக்கள் தொகையும் பெருகி வரும் நிலையில், இப்பதவிகளுக்கு மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு வழங்க மாநகராட்சி நிர்வாகம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலருக்கு மாநகராட்சி சார்பில் கருத்துரு அனுப்பப்பட்டது. அதை ஏற்று கடந்த வாரம் அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

அதேபோன்று சென்னை மாநகராட்சி தலைமையகத்தில் தற்காலிகமாக உருவாக்கப்பட்ட 4 துணை ஆணையர் பதவிகள் மற்றும் அதனை சார்ந்த 4 சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளுக்கும் 3 ஆண்டுகள் நீட்டிப்பு வழங்கி அரசு உத்தரவிட்டுள்ளது.

வீல்ஸ் இந்தியா லிமிடெட்

பதிவு அலுவலகம் : எண். 21, பட்டுல்லாஸ் ரோடு, சென்னை - 600 002 தொலைபேசி எண். 044 - 2852 2745.
மின்னஞ்சல் முகவரி : investorservices@wheelsindia.com இணையதளம் : www.wheelsindia.com
CIN: L35921TN1960PLC004175

டெபாசிட்டுகளின் ஏற்பு மற்றும் புதுப்பித்தல்

டெபாசிட் திட்டங்கள் (உத்தரவாதம் இல்லாதது)

வைப்பு தொகை சம்பந்தமான சந்தேகங்களுக்கு உதவி தொலைபேசி எண் 044-28522745

பொதுமக்களுக்கும் பங்குதாரர்களுக்கும்

2013ம் வருடத்தைய கம்பெனிகள் (டெபாசிட்டுகள் ஏற்பு) விதிகள், பிரிவு 73(2)(a), பிரிவு 76 மற்றும் 2014 வருடத்தைய விதி 4(1) மற்றும் 4(2)ன்படி பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களிடமிருந்து டெபாசிட்டுகள் வரவேற்பதற்கான விளம்பர வடிவிலான சுற்றறிக்கை. கம்பெனி கீழ்க்கண்ட விரிவான விதிகளின்படி டெபாசிட்டுகளை வரவேற்று ஏற்றுக் கொள்கிறது.

திட்டம் அ – ஃபிக்ஸட் டெபாசிட்

காலம்	குறைந்தபட்ச டெபாசிட்	வருடாந்திர வட்டி விகிதம்
12 மாதங்கள்	ரூ. 21,000/-	6.25%
24 மாதங்கள்	ரூ. 21,000/-	6.75%
36 மாதங்கள்	ரூ. 21,000/-	7.00%

திட்டம் அ வைப்பு வட்டி மார்ச் 31, ஜூன் 30, செப்டம்பர் 30 மற்றும் டிசம்பர் 31ல் வட்டி காலாண்டுக்கு ஒருமுறை வழங்கப்படும்.

திட்டம் ஆ – குமுலேடிவ் டெபாசிட்

காலம்	குறைந்தபட்ச டெபாசிட்	காலமுடிவில் கிட்டும் தொகை ரூ. 21000/-★	அதற்கு மேல் ரூ. 1.000/-க்கு★	ஆண்டு விளை பயன்
12 மாதங்கள்	ரூ. 21,000/-	ரூ. 22344	1064/-	6.40%
24 மாதங்கள்	ரூ. 21,000/-	ரூ. 24003	1143/-	7.15%
36 மாதங்கள்	ரூ. 21,000/-	ரூ. 25851	1231/-	7.70%

★ குமுலேட்டிவ் டெபாசிட்டுகளின் மீதான வட்டி, மார்ச் 31 மற்றும் முதிர்வடையும்போது வரி பிடித்தலுக்கு உட்பட்டது. வரி பிடித்தலுக்கான சான்றிதழ் மார்ச் 31 மற்றும் முதிர்வடையும்போது டெபாசிட்காரர்களுக்கு கம்பெனியால் வழங்கப்படும். வரி பிடித்தலுக்கு பின்வரும் வட்டி தொகை மட்டுமே பின்வரும் காலங்களுக்கு வட்டி கணக்கிட எடுத்துக் கொள்ளப்படும் மற்றும் அதற்கேற்றவாறு முதிர்வடையும்போது வழங்கப்படும் தொகை குறையும்.

1. பொதுவான தகவல்கள்

அ. கம்பெனியின் பெயர், முகவரி, மற்றும் இணையதளம் : வீல்ஸ் இந்தியா லிமிடெட்
CIN:L35921TN1960PLC004175
எண். 21, பட்டுல்லாஸ் ரோடு, சென்னை - 600 002. தொலைபேசி : 044-28522745.
இணையதளம் : www.wheelsindia.com

ஆ. கம்பெனி நிறுவப்பட்ட தேதி : 13.06.1960

இ. கம்பெனி நடத்தும் அலுவல்களும் நிர்வாகத்தின் கீழ் உள்ள நிறுவனங்களும் மற்றும் கிளைகள் அல்லது யூனிட்டுகளைப் பற்றிய விவரங்கள் : வர்த்தக வண்டிகள், கார்கள், பல பயன்பாட்டு வாகனங்கள், டிராக்டர்கள் மற்றும் ராணுவத்திற்குத் தேவையான சக்கரங்கள் தயாரித்தல், வர்த்தக வண்டிகளுக்கு ஏர்சஸ்பென்ஷன் கருவி பொருத்துதல் மற்றும் எரிசக்தித் துறைக்கான நிர்மான உபகரணங்கள் தயாரித்தல்.

தொழிற்சாலைகளின் முகவரிகள் 31.03.2021ன்படி கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
பாடி : எம்.டி.எச் ரோடு, பாடி, சென்னை - 600 050, தமிழ்நாடு.
ராம்பூர் : எண்.22, கே.எம் ராம்பூர் தண்டா ரோடு, போஸ்ட் தண்டா – பத்லி, ராம்பூர் மாவட்டம், உத்தரபிரதேசம் - 244 925, .
புனே : பிளாட் எண் சி1, MIDC, ரஞ்சன்கோவன் கணபதி, காரேகான் கிராமம், சிரூர் தாலுகா, புனே மாவட்டம், மகாராஷ்டிரா - 412 220, .
ஸ்ரீபெரும்புதூர் : சிங்கபெருமாள் கோவில் ரோடு, போந்தூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம் - 602 105.
பந்த் நகர் : பிளாட் எண் 56, செக்டார் 11, இண்டகிரேடட் இண்டஸ்ரியல் எஸ்டேட், பந்த் நகர், ருத்ரபூர், உதாம்சிங் நகர், உத்தரகாண்ட் - 263 153.
டியோலி : பிளாட் எண் டி3, டியோலி குரோத் சென்டர், MIDC டியோலி, டியோலி தாலுகா, வார்தா மாவட்டம், மகாராஷ்டிரா - 442 101.
தொடுகாடு : 13/3, அரக்கோணம் ரோடு, நமச்சிவாயபுரம், தொடுகாடு கிராமம் மற்றும் போஸ்ட், திருவள்ளுவர் தாலுக்கா மற்றும் மாவட்டம், தமிழ்நாடு – 602 105
மாம்பாக்கம் : சர்வே எண் 281, பிளாட் எண். K-18/2, சிப்காட் இண்டஸ்ட்ரியல் பார்க், பேஸ் – 2, மாம்பாக்கம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர், பின்கோடு - 602 105.
புக்கதுரை : சர்வே எண் 147/2B & 147/3, ஜிஎஸ்டி ரோடு, புக்கதுரை கிராமம், மதுராந்தகம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம், பின்கோடு – 603 308.
தெர்வாய்கண்டிகை : பிளாட் எண். A-4/1A pt.1 மற்றும் A-4/1B, சிப்காட் இண்டஸ்ட்ரியல் பார்க், தெர்வாய்கண்டிகை, கும்மிடிப்பூண்டி தாலுகா, திருவள்ளூர், தமிழ்நாடு – 601 202.
இருங்காட்டுக்கோட்டை : எண்.102, சுமந்தராபேடு கிராமம், இருங்காட்டுக்கோட்டை, தமிழ்நாடு – 602 117.

துணை நிறுவனங்களின் வர்த்தகங்கள் : கம்பெனியின் துணை நிறுவனமான வில் கார் வீல்ஸ் லிமிடெட் நிறுவனம் பயணிகள் கார் ஸ்டீல் சக்கர வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளது. 31.03.2021 அன்று இதன் தயாரிப்பு நடைபெறும் இடங்கள் கீழ்க்கண்டவாறு :
பாடி : பாடி, சென்னை - 600 050, தமிழ்நாடு.
பாவல் : பிளாட் எண் 11-18, செக்டார் 07, HSIDC பாவல், ரிவாரி மாவட்டம் - 123 501, ஹரியானா.
வனோத் : சர்வே எண். 91/1, கிராமம் : வனோத், பீஜ்ஜராஜி–டசாடா ரோடு, பீஜ்ஜராஜி அருகில், தாலுக்கா : டசாடா, மாவட்டம் : சுரேந்திரநகர், குஜராத் - 382750

ஈ. நிறுவனத்தின் மேலாண்மை பற்றிய சிறுகுறிப்பு :
– நிறுவனம், இயக்குநர்களின் மேற்பார்வைக்குட்பட்டு, சேர்மனால் நிர்வகிக்கப்படுகிறது.

உ. 21.05.2021 அன்று இயக்குநர்களின் பெயர்கள், முகவரி, DIN எண்கள் மற்றும் தொழில் விவரங்கள் :

பெயர் மற்றும் DIN	முகவரி	தொழில்
திரு. எஸ். ராம், சேர்மன் DIN: 00018309	57, பழைய எண். 29, பிருதிவி அவென்யு, சென்னை 600018	நிறுவன இயக்குநர்
திரு. எஸ். விஜி DIN: 00139043	71, போயஸ் கார்டன், சென்னை 600086	நிறுவன இயக்குநர்
திரு. ஸ்ரீவத்ஸ் ராம் மேனேஜிங் டைரக்டர், DIN: 00063415	57, பழைய எண். 29, பிருதிவி அவென்யு, சென்னை 600018	நிறுவன இயக்குநர்
திரு. எஸ். பிரசாத் DIN: 00063667	பிளாட் நெ.D1, பழைய எண்.87, புதிய எண்.41, அசோக் பிரத்திவி, 4வது தெரு, அபிராமபுரம், சென்னை 600018	பட்டய கணக்காளர்
திரு. அருன் ராமன் DIN : 00201205	403, ஒலம்பஸ்-1, பிரஸ்டீஜ் அக்ரோபோலிஸ் அபார்ட்மெண்ட்ஸ், ஒசூர் ரோடு, கொரமங்களா, பெங்களூரு 560029	நிறுவன இயக்குநர்
திரு. ஆர்.ரகுத்தாமா ராவ் DIN : 00146230	3, லாவண்யா விலாஸ், 20 ராகவைய்யா ரோடு, தி.நகர், சென்னை 600017	நிறுவன இயக்குநர்
திருமதி. சுமித்ரா கோமடம் DIN : 07262602	பழைய எண்.6ஏ, புதிய எண்.13/1, டி சில்வா ரோடு, மயிலாப்பூர், சென்னை 600004	நிறுவன இயக்குநர்
திரு. ரிஷிகேஷா டி கிருஷ்ணன் DIN : 00064067	G - 501, நாகார்ஜுனா கிரீன்ரிட்ஜ் அபார்ட்மெண்ட்ஸ், 19வது மெயின், 27வது குறுக்கு, HSR லேஅவுட் செக்டார் 2, பெங்களூரு 560102	நிறுவன இயக்குநர்

ஊ. நிறுவனத்தின் இடர்கள் தொடர்பான கருத்துக்கள் :

வைப்புத் தொகையின் 2 பிரிவுகளும் (நிலையான / ஒட்டுமொத்த) இயல்பாக பாதுகாப்பற்றவை. ஆனால் வைப்புத் தொகையை திரும்ப வழங்குவதிலும் அல்லது அதற்கான வட்டியை வழங்குவதிலும் எந்தவிதமான குறையும் இல்லாமல், இன்று வரை வைப்புத் தொகையாளர்களுக்கு சேவை செய்வதில் நிறுவனம் சாதனை படைத்துள்ளது. கம்பெனிகள் சட்டம் 2013, பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதற்கான விதிகளின்படி, கம்பெனிகள் விதிகள் (வைப்புத் தொகை ஏற்பு) 2014, ஒரு ஷெட்யூல் வங்கியால் பராமரிக்கப்பட்டு வரும் திரும்ப செலுத்தும் ரிசர்வ் கணக்கு டெபாசிட்டில் நிதியாண்டு முதிர்ச்சியையும் அதன் வைப்பு தொகையில் 20 சதவீதத்தை டெபாசிட் செய்துள்ளது.

கிரெடிட் ரேட்டிங் : ICRA MA+ நிலையானது (ICRA MA Plus - நிலையானது என்று அழைக்கப்படுகிறது)
வெளிநிலையானது எதிர்மறையிலிருந்து நிலையானதாக மாற்றப்பட்டுள்ளது.

எ. டெபாசிட்டுகளின் திருப்பி அளிக்கத் தவறிய விவரங்கள், தொகைகள் மற்றும் காலம் மற்றும் நடப்பு நிலை :

i) சட்டபூர்வமான திருப்பி அளிக்கப்பட வேண்டியவை	இல்லை
ii) கடன்கள் மற்றும் அதற்கான வட்டி	பொருந்தாது
iii) வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் அதற்கான வட்டி	இல்லை

2. டெபாசிட் திட்ட விவரங்கள்

அ. குழுவின் தீர்மானம் ஏற்கப்பட்ட நாள் : 21.05.2021

ஆ. டெபாசிட்டுகளை ஏற்க அங்கீகாரம் பற்றிய தீர்மானம் ஏற்கப்பட்ட பொதுக் கூட்டம் : ஆண்டு பொது கூட்டம் 08.09.2014 அன்று ஆண்டு பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்களின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இ. டெபாசிட்டுகளின் வகைகள் – அதாவது உத்தரவாதம் பெறப்பட்டது மற்றும் பெறப்படாதது : **உத்தரவாதம் பெறப்படாத டெபாசிட்டுகள்**

ஈ. சட்டத்தின்படி மற்றும் அதன் விதிகளின்படி கம்பெனி டெபாசிட்டுகளாக எழுப்பக்கூடிய தொகை, முந்தைய நிதியாண்டின் கடைசி நாளில் வைத்துள்ள மொத்த டெபாசிட் தொகை விளம்பரம் அல்லது சுற்றறிக்கை வெளியிடப்பட்ட அன்று எழுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ள டெபாசிட் தொகை மற்றும் அடுத்த 12 மாதங்களில் திருப்பி அளிக்கப்பட வேண்டிய டெபாசிட் தொகை :

(ரூ. கோடிகளில்)

வ. எண்	விவரங்கள்	டெபாசிட்டுகள் ஏற்கப்பட வேண்டிய வரம்பு	31.03.2021 அன்று கைவசமுள்ள டெபாசிட்
1	பொதுமக்களிடமிருந்து : (செலுத்தப்பட்ட மூலதனம், ஃப்ரீ ரிசர்வ்கள் இவைகளின் முழு மொத்தத்தில் 25%)	150.41	149.92
2	பங்குதாரர்களிடமிருந்து (செலுத்தப்பட்ட மூலதனம் மற்றும் ஃப்ரீ ரிசர்வ்கள் இவைகள் மொத்தத்தில் 10%)	60.16	53.02
	மொத்தம்	210.57	202.94

முந்தைய நிதியாண்டு அதாவது 31.03.2021 அன்று கைவசமிருந்த டெபாசிட்டுகளின் மொத்தம் ரூ.202.94 கோடிகள். சுற்றறிக்கை நாளில் அதாவது 21.05.2021 அன்று கம்பெனியின் கைவசமிருந்த டெபாசிட்டுகளின் மொத்தம் ரூ.203.30 கோடிகள். திரட்டப்பட நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகை : சட்டம் மற்றும் விதிகளின் பரிந்துரை செய்யப்பட்டுள்ள அளவுகளில் உள்ளது.

வரவிருக்கும் நிதியாண்டின் கடைசி நாளன்று, அதாவது 31 மார்ச் 2021 அன்று, அடுத்த 12 மாதங்களுக்குள் திருப்பி அளிக்கவேண்டிய டெபாசிட் தொகை ரூ. 47.97 கோடிகள். முதிர்வடைந்த டெபாசிட் மற்றும் கோரப்படாத தொகை ரூ. 2.44 கோடிகள் ஆகியவை இத்தொகையில் அடங்கும்.

உ. டெபாசிட்டுகள் ஏற்க வரைமுறைகள் : காலம், வட்டி விகிதம், திருப்பி அளிக்கும் வகை :

இரண்டு திட்டங்களுக்கும் பிரதான வரைமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

குறைந்தபட்ச டெபாசிட் தொகை : ரூ.21,000/- அதற்குப்பின் ரூ.1,000/- மற்றும் அதன் மடங்குகளில்

டொபாசிட் காலம் : டொபாசிட் 12/24/36 மாதங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

வட்டி விகிதம் : 12 மாதங்களுக்கு 6.25%
24 மாதங்களுக்கு 6.75%
36 மாதங்களுக்கு 7.00%
கம்பெனியானது வட்டி விகிதத்தை அவ்வப்பொழுது மாற்றவோ / திருத்தவோ / சரிசெய்யவோ உரிமையுள்ளது. டெபாசிட் ஏற்பது / புதுப்பிப்பது விண்ணப்பப் படிவத்தில் உள்ளவாறு விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு இருக்கும்.

வட்டி வழங்கப்படும் நாள் : திட்டம் – அ திட்டத்தில் ஜூன் 30, செப்டம்பர் 30, டிசம்பர் 31, மார்ச் 31 ஆகிய தேதிகளில் காலாண்டிற்கு ஒரு முறையும் மற்றும் முதிர்வடையும் போதும் வழங்கப்படும். திட்டம் 'ஆ'வில் ஒவ்வொரு காலாண்டும் வட்டி டெபாசிட் தொகையுடன் கூட்டப்பட்டு முதிர்வடையும் பொழுது டெபாசிட் தொகையுடன் வழங்கப்படும்.

அசல் திருப்பி அளிக்கப்படும் நாள் : டெபாசிட்டுகள் முதிர்வடையும் பொழுது வழங்கப்படும். முதிர்வுக்கு முன் சாதாரணமாக திரும்பப் பெற அனுமதிப்பதில்லை. இருப்பினும் வாடிக்கையாளர்களின் முக்கிய தேவைக்கேற்ப கம்பெனியின் முடிவின் பேரில் கம்பெனிகள் (டெபாசிட் ஏற்பு) விதிகள் 2014ன்படி வழங்கப்படும்.

டெபாசிட் பெறப்படும் முறை : டெபாசிட் தொகை சென்னையில் பெறக்கூடிய அக்கவுண்ட் பேயி காசோலை/வரைவோலையாக அல்லது NEFT/RTGS மூலம் பெறப்படும். வரைவோலைக்கான தொகை அசல் தொகையில் இருந்து கழிக்கப்படக் கூடாது. வெளியூர் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. டெபாசிட் தொகை பணமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

டெபாசிட் புதுப்பித்தல் : டெபாசிட் ரசீதுகளை முழுமையாக பூர்த்தி செய்து புதிய விண்ணப்பத்துடன் அளித்தால் டெபாசிட் புதுப்பிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தேவையான தொகையுடன் கம்பெனியின் பதிவு அலுவலகம் எண். 21, பட்டுல்லாஸ் ரோடு, சென்னை - 600 002 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கம்பெனியால் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் அதற்கான விண்ணப்பப் படிவத்தில் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

ஊ. சுற்றறிக்கை அல்லது விளம்பரத்தின்படி, சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டால், டெபாசிட் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கான நாள் மற்றும் நேரம் : இந்நிறுவனம் அதன் முதலீட்டாளர்களுக்காக தொடர்ந்து இயங்கி வருகிறது. இந்த சுற்றறிக்கை 2021–22ம் நிதியாண்டிற்காக தொடர்ந்து முதலீடுகளை பெறவும் / ஏற்கனவே பெறப்பட்டுள்ள முதலீடுகளை புதுப்பிக்கவும் வெளியிடப்படுகிறது. இதன் வட்டி விகிதத்தில் திருத்தம் ஜூலை 10, 2021 முதல் நடைமுறைபடுத்தப்படவுள்ளது. இந்த சுற்றறிக்கை 2021–22 நிதியாண்டு முடிவிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் அல்லது அடுத்த வருடாந்திர பொதுக்கூட்ட தேதி வரை இவற்றில் எது முன்னதாக வருகிறதோ அதுவரை செல்லுபடியாகும்..

எ. டெபாசிட்டுகள் கோரப்படுவதற்கான காரணம் :
கம்பெனியின் நீண்ட கால தேவைகளுக்காக

ஏ. பெறப்பட்ட கிரெடிட் ரேட்டிங் சான்றிதழ்கள் (கிரெடிட் ரேட்டிங் ஏஜென்சியின் பெயர் பெறப்பட்ட சான்றிதழ் அதன் விளக்கம் மற்றும் பெறப்பட்ட நாள்):
ICRA MA+ Stable (MA+ Stable என்று அழைக்கப்படுவது) நாள் 31.03.2021 சான்றிதழின் தரம் ("நிலையானது")

ஐ. டெபாசிட்டுகளின் மீது உத்தரவாதம் பெற உருவாக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட வேண்டிய விதிகள், ஏதேனுமிருந்தால் :
டெபாசிட்டுகள் உத்தரவாதம் பெறாததால் இது பொருந்தாது.

ஒ. இயக்குநர்கள், புரோமோட்டர்கள் அல்லது முக்கிய மேலாண்மை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட டெபாசிட்டுகளின் வட்டி விகிதங்களால் சாதாரண டெபாசிட்டுகளில் ஏற்படும் மாறுதல்கள் :
இயக்குநர்கள், புரோமோட்டர்கள் அல்லது முக்கிய மேலாண்மை அதிகாரிகள் டெபாசிட்டுகளில் சம்பந்தப்படவில்லை.

3. 31.03.2021 அன்று திருப்பி தரப்படாத (கோரப்படாத) டெபாசிட்டுகள்

அ. நிலுவைத் தொகை : ரூ. 202.94 கோடிகள் (வட்டி உட்பட திருப்பித் தரவேண்டிய டெபாசிட்டுகள்)
ஆ. ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் : வெவ்வேறு நாட்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
இ. ஏற்றுக் கொள்ளப்பட்ட மொத்த தொகை : ரூ. 105.29 கோடிகள்
ஈ. வட்டி விகிதம் : வெவ்வேறு விகிதங்கள்
உ. டெபாசிட்டர்களின் எண்ணிக்கை : 4,300 எண்ணிக்கைகள்

ஊ. திருப்பி அளிக்கப்படாத டெபாசிட்டுகள் அதன் மீதான வட்டி மற்றும் டெபாசிட்டர்களின் எண்ணிக்கை தொகை மற்றும் திருப்பி அளிக்கப்படாத காலம் : இல்லை

எ. டெபாசிட்காரர்களால் தள்ளுபடி செய்யப்பட்ட வட்டி : இல்லை

4. கம்பெனியின் நிதி நிலை

அ. சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வெளியிடப்படும் நாளுக்கு முன் மூன்று நிதியாண்டுகளுக்கான வரி ஒதுக்கீட்டுக்கு முன்னும் பின்னும் கம்பெனியின் லாபம் :

(ரூ. கோடிகளில்)

முடிவடைந்த ஆண்டு	வரிக்கு முன் லாபம் / (நஷ்டம்)	வரிக்கு பின் லாபம் / (நஷ்டம்)
31.03.2019	108.42	75.67
31.03.2020	44.60	54.11
31.03.2021	9.72	6.75

ஆ. மூன்று நிதியாண்டுகளுக்கான அறிவிக்கப்பட்ட டிவிடெண்ட், வட்டி விகிதம் (வட்டி மற்றும் வரியும் அல்லது வட்டிக்குப் பின் பனலாம்):

முடிவடைந்த ஆண்டு	அறிவிக்கப்பட்ட டிவிடெண்ட் (சமபங்கு) (ரூ. கோடிகளில்)	டிவிடெண்ட் %	லாபத்தில் வட்டியின் மடங்கு
31.03.2019	19.25	80	2.75
31.03.2020	13.60	56.5	1.72
31.03.2021	2.41	10	1.08

இ. சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வெளியிடுவதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஸ் ஷீட்டுகளின்படி கம்பெனியின் சுருக்கமான குறிப்பு :

(ரூ. கோடிகளில்)

விவரங்கள்	31.03.2021 அன்று	31.03.2020 அன்று	31.03.2019 அன்று
பங்கு மற்றும் பொறுப்புகள்			
பங்குதாரர்களின் தொகைகள்	599.32	597.47	568.61
நடப்பில் இல்லா பொறுப்புக்கள்	375.50	295.86	242.63
நடப்பில் உள்ள பொறுப்புக்கள்	1242.98	868.23	991.73
மொத்தம்	**2217.80**	**1761.56**	**1802.97**
சொத்துக்கள்			
நடப்பில் இல்லா சொத்துக்கள்	867.21	830.01	700.07
நடப்பு சொத்துக்கள்	1350.59	931.55	1102.90
மொத்தம்	**2217.80**	**1761.56**	**1802.97**

ஈ. சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வெளியிடுவதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் தணிக்கை செய்யப்பட்ட கேஷ்ஃப்ளோ அறிக்கை :

(ரூ. கோடிகளில்)

	31-03-2021	31-03-2020	31-03-2019
செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்து பெறப்பட்ட தொகை	137.55	158.91	175.35
முதலீட்டு நடவடிக்கைகளில் மூலம் பெறப்பட்ட தொகை	(109.73)	(198.83)	(182.92)
நிதி நடவடிக்கைகளில் இருந்து பெறப்பட்ட தொகை	(27.06)	51.52	(0.34)
பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகளின் மொத்த ஏற்றம்	0.76	11.60	(7.91)

உ. கடந்த மூன்று ஆண்டுகளில் இலாபங்கள் மற்றும் ரிசர்வ்கள் மீது கம்பெனியின் கொள்கை மாற்றம்: இல்லை.

5. இயக்குநர்களின் அறிவிப்பின்படி

அ. சட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ ஏற்றுக் கொள்ளப்பட்ட டெபாசிட்டுகளை திருப்பி அளிப்பதிலோ அதற்கான வட்டி வழங்குவதிலோ கம்பெனி இதுவரை தவறியதில்லை. கம்பெனி கடந்த ஐந்து வருடங்களாக இத்தகைய வைப்புத் தொகைகளில் இயல்பான நிகழ்வுகளுடன் செயல்பட்டு வருகிறது;

ஆ. இயக்குநர்கள் கம்பெனியின் நடவடிக்கைகள் மற்றும் வளமான வாய்ப்புகள் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளனர். கம்பெனியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால நிதிநிலையின்படி தங்கள் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு இந்த சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வெளியிடப்படுவதற்கு ஒரு வருட காலத்திற்குள் கம்பெனி திவாலாகாமல் நல்ல நிலையில் வைத்திருப்பார்கள் என்று இயக்குநர்கள் குழு கருதுகிறது;

இ. கம்பெனி சட்டம் மற்றும் விதிகளுக்கு உடன்பட்டு செயல்படுகிறது;

ஈ. இச்சட்டம் மற்றும் விதிகளின்படி செயல்படுவதால் டெபாசிட்டுகள் திருப்பி அளிக்கப்படுவது மத்திய அரசினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டது என்று ஏற்றுக் கொள்ள முடியாது;

உ. கம்பெனிகள் சட்டம் 1956 மற்றும் அந்த சட்டத்தின்படி அமைந்த விதிகளின்படி, நிறுவனம் பெற்றிருந்த டெபாசிட்களையும், [முந்தைய டெபாசிட்கள்] அதன் வட்டியையும் முறையாக திருப்பி செலுத்தி வருகிறது. இனி வருங்காலத்திலும், அந்த 'முந்தைய டெபாசிட்களை' கம்பெனிகள் சட்டம் 2013ன்படியும், அந்த சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளின்படியும், முதல் தொகை மற்றும் வட்டியை திருப்பி செலுத்தும்;

ஊ. கிரெடிட் தர வரிசையில் ஏதேனும் பாதகமான மாற்றமிருந்தால், டெபாசிட்டர்கள் தங்கள் டெபாசிட்டுகளை அபராதம் இல்லாமல் திருப்பி பெற வாய்ப்பளிக்கப்படும்;

எ. சுற்றறிக்கை அல்லது சுற்றறிக்கை வடிவிலான விளம்பரத்தில் உள்ளபடி பெறப்பட்ட டெபாசிட்டுகள் பயன்படுத்தப்படும்;

ஏ. கம்பெனி ஏற்கும் டெபாசிட்டுகள் உத்தரவாதமற்றதாகவும் கம்பெனியின் இதர உத்தரவாதமற்ற பொறுப்புக்களுக்கு சமமான நிலையில் உள்ளது.

6. பொறுப்புதுறப்பு

இந்த விளம்பரமோ, பதிவாளரிடம் பதிவு செய்துள்ள இச்சுற்றறிக்கையின் நகலோ, இவ்விளம்பரத்தை மத்திய அரசு அல்லது, கம்பெனிகள் பதிவாளர் ஒப்புதல் அளித்ததாக எந்த விதத்திலும் கருதக்கூடாது. கம்பெனிகள் பதிவாளர் அல்லது மத்திய அரசு எந்த விதத்திலும், இந்த விளம்பரம் / சுற்றறிக்கையின் உண்மைத்தன்மை, இந்த நிறுவனத்தின் நிதி நிலைமை, திரட்டப்படும் வைப்பீடுகளின் பாதுகாப்பு மற்றும் இந்த விளம்பரம் / சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ள தகவல்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பு ஏற்காது. வைப்பீடுகளில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்கள் கவனமாகவும், அவர்களின் சொந்த கருத்தின் அடிப்படையிலும் முதலீடுகளை செய்ய வேண்டும்.

குறிப்பு

இந்த விளம்பரத்தின் வாசகமானது கம்பெனியின் இயக்குநர் குழுவால் 21.05.2021 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கம்பெனிகள் (டெபாசிட் ஏற்பு) 2014 விதிகள் மற்றும் மாற்றங்களின்படி கம்பெனியின் பெரும்பான்மை இயக்குனர்களால் கையெழுத்திடப்பட்ட இவ்விளம்பரத்தின் நகல் சென்னை 600 006-ல் உள்ள தமிழ்நாட்டிற்கான கம்பெனிகள் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்விளம்பரம் இயக்குநர் குழுவின் அதிகாரப்படி அவர்கள் பெயரில் வெளியிடப்படுகிறது.

இயக்குநர் குழு ஆணைப்படி
வீல்ஸ் இந்தியா லிமிடெட்டிற்காக
கே வி லக்ஷ்மி
கம்பெனி செயலாளர்

சென்னை
21.05.2021

விதிகள் கட்டுப்பாடுகள் விண்ணப்பங்கள் மற்றும் மேலும் விவரங்களுக்கு எங்கள் அங்கீகரிக்கப்பட்ட சேவையை தொடர்பு கொள்ளவும். சுந்தரம் பைனான்ஸ் ஹோல்டிங்க்ஸ் லிட்., எண். 21, பட்டுல்லாஸ் ரோடு, சென்னை - 600 002 அல்லது பதிவு அலுவலகம் எண். 21, பட்டுல்லாஸ் ரோடு, சென்னை - 600 002.

visalam.s@hindutamil.co.in